# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல்

**வேறொருவரின் தவறான செயல், செய்யாமை, கவனயீனம் அல்லது தவறுகை ஒன்றினால் விளைவிக்கப்பட்ட ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுவதற்காக ஏற்பாடு செய்வதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளை வான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால்*
*2018, ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 269 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல்

ச.வ-ஓ. 25/2017

**வேறொருவரின் தவறான செயல், செய்யாமை, கவனயீனம் அல்லது தவறுகை ஒன்றினால் விளைவிக்கப்பட்ட ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுவதற்காக ஏற்பாடுசெய்வதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப்பெயர்.**

***1.*** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

**வழக்கொன்றைப் பேணுவதற்கான உரிமை.**

***2.*** (1) வேறொருவரின் தவறான செயல், செய்யாமை, கவனயீனம் அல்லது தவறுகை ஒன்றினால் ஆளொருவரின் இறப்பு விளைவிக்கப்படுமிடத்து, (இதனகத்துப்பின்னர் ''விண்ணப்பகாரர்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள், எந்த ஆளின் தவறான செயல், செய்யாமை, கவனயீனம் அல்லது தவறுகையினால் அத்தகைய ஆளின் இறப்பு விளைந்ததோ அந்த ஆளுக்கெதிராக, அது தொடர்பில் சேதவீடுகளுக்கான வழக்கொன்றைப் பேணுவதற்கு உரிமையுடையவராதல் வேண்டும்.

(2) வழக்கானது பின்வருவோரினால் பேணப்படலாம்:-

(அ) பெற்றோரொருவர் அல்லது கூட்டாக பெற்றோர்கள்;

(ஆ) பிள்ளை அல்லது கூட்டாக பிள்ளைகள்;

(இ) உடன்பிறந்தோர் அல்லது கூட்டாக உடன்பிறந்தோர்கள்;

(ஈ) பாட்டன் அல்லது பாட்டி அல்லது கூட்டாக பாட்டன் மற்றும் பாட்டி; அல்லது

(உ) பாதுகாவலர்.

ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகள்.

**3**. ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுவதற்கான வழக்கொன்றில், விண்ணப்பகாரர், பின்வருவனவற்றுக்கான சேதவீடுகளை அறவிடலாம் -

(அ) அவ்வாளின் அன்பு மற்றும் ஆதரவு அத்துடன் கவனிப்பு மற்றும் தோழமை என்பவற்றின் இழப்பு; அத்துடன்

(ஆ) மனவேதனை மற்றும் துன்பம்.

அடுத்துறுவதற்கான உரிமையில்லை.

**4**. விண்ணப்பகாரரொருவர் -

(அ) இச்சட்டத்தின்கீழான உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படுமுன்னர்; அல்லது

(ஆ) உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்பட்ட பின்னர் ஆனால் தீர்ப்பொன்று ஆக்கப்படுமுன்னர்,

இறக்குமிடத்து, அத்தகைய இறந்துள்ள விண்ணப்பகாரரின் மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள் அல்லது நிருவாகிகள் சேதவீடுகளுக்கான உரிமையெதனையும் கொண்டிருத்தலாகாது.

நிபுணரொருவரின் உதவி.

**5**. நீதிமன்றமானது, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் கருமம் பற்றி முடிபுசெய்யும் நோக்கத்துக்காக, கவனத்தின்கீழுள்ள கருமத்துக்கு இயைபான ஏதேனும் கருமத்தில் விசேட தேர்ச்சிபெற்றவர்களான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை உதவிக்காகக் கோரலாம்.

கைவிடுகை ஏற்பட்டுள்ள விடத்தான சேதவீடுகள்.

**6**. இறந்துள்ள ஆளைக் கைவிட்டுள்ளவரான எவரேனும் விண்ணப்பகாரர் இச்சட்டத்தின்கீழான சேதவீடுகளை உரிமை கோருவதற்கு உரித்துடையவராதலாகாது.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறேதேனும் பரிகாரிப்புக்கு மேலதிகமானவையாகவிருத்தல்.

**7**. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது எழுத்துருவில்லாத சட்டத்தினால் வழங்கப்பட்ட வேறேதேனும் உரிமைக்கு அல்லது பரிகரிப்புக்கு மேலதிகமானவையாக இருத்தல் வேண்டும்; அவற்றைக் குறைப்பனவாகவல்ல.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.